<u>காலாண்டுத்தேர்வு - மாதிரிவினாத்தாள்</u> --- 2 ( 2022 )

மேல்நிலை முதலாம் ஆண்டு

வணிகவியல்

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

பகுதி --- I

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்</u>. 20 × 1 = 20

1. பின்வருவனற்றுள் எது வியாபார நடவடிக்கையின் சிறப்பியல்புகள் இல்லை?
   அ) பொருட்கள் மற்றும் சேவையை உருவாக்குதல் ஆ) இடர் ஏற்றல்
   இ) பொருள் மற்றும் சேவை பரிமாற்றம் ஈ) சம்பளம் / கூலி

2. நிறுமச் சட்டத்தின் அட்டவணை - அ (Table-A) என்பது
   அ) நிகழச்சிக் குறிப்பேட்டின் மாதிரி ஆ) இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரிப் படிவம்
   இ) நிறுமச் செயல் முறை விதிகளின் மாதிரி ஈ) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி

3. விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் ---------- தடையை நீக்கலாம்.
   அ) இடத்தடை ஆ) காலத்தடை இ) அறிவுசார் தடை ஈ) நட்ட இடர்பாட்டு தடை

4. ---------- சட்டத்தின் படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவரகள்.
   அ) இந்துச் சட்டம் ஆ) மிட்டக்சாரா சட்டம்
   இ) தாயபாகா சட்டம் ஈ) மேற்கண்ட யாவும்

5. தவறான பொருத்தம் எது?
   அ) கூட்டுறவு சங்கம் --- ஒரு நபர் ஒரு வாக்கு
   ஆ) கடன் சங்கம் --- வேளாண் கடன் சங்கம்
   இ) கூட்டுறவின் கொள்கை --- இலாபம்
   ஈ) கூட்டுறவின் அடித்தளம் --- பரஸ்பர நம்பிக்கை

6. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்
   அ) பொருளாதாரச் செயல்பாடுகள் ஆ) பண நடவடிக்கைகள்
   இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள் ஈ) நிதி நடவடிக்கைகள்

7. வேறுபட்ட ஒன்று எது?
   அ) கொற்கை ஆ) காவிரிப் பூம்பட்டினம்
   இ) குமரி ஈ) காயல்பட்டினம்

8. பின்வருவனவற்றில் எவை தவறான கூற்று ?
   அ) கூட்டாண்மையின் குறைபாடுகளை களைவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு கூட்டுப்பங்கு நிறுமம்
   ஆ) தனியாள் வணிகம் மற்றும் கூட்டாண்மையைக் காட்டிலும் நிறுமத்திற்கு பேரளவு மூலதனத்தை திரட்ட முடியும்
   இ) நிறுமம் தனது பெயரில் சொத்துக்களை வாங்கலாம்
   ஈ) உறுப்பினர்கள் நிறுமச் சொத்தின் மீது உரிமை கொண்டாடலாம்

9. அனைத்து கூட்டுறவுகளும் நிறுவப்படுவதற்கு ---------
   அ) தொண்டு நிறுவன நோக்கம் ஆ) சேவை நோக்கம்
   இ) இலாப நோக்கம் ஈ) சீர்திருத்த நோக்கம்



10. பல நாடுகளில் இயங்கும் நிறுவனங்கள் ஒரு நாட்டில் இருந்து நிர்வகிக்கப்படுகின்றன. இதனை ________ நிறுவனங்கள் எனலாம்.
    அ) அரசு நிறுவனங்கள் ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்
    இ) தனியார் நிறுவனங்கள் ஈ) இணை நிறுவனங்கள்

11. ஒரு அரசாங்க நிறுவனம் யார் பெயரில் பங்குகளை வாங்குகிறது?
    அ) பிரதமர் ஆ) குடியரசுத் தலைவர்
    இ) இந்தியத் தலைமை நீதிபதி ஈ) மாநில முதலமைச்சர்

12. வங்கியர்கள் பணத்தை கையால்பவர்கள் மட்டுமல்ல, ------------- க்கு வழிகாட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள்.
    அ) பொருளாதார வளர்ச்சி ஆ) வர்த்தக வளர்ச்சி
    இ) தொழில் வளர்ச்சி ஈ) சேவை வளர்ச்சி

13. எந்த வகையான கணக்கு, குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சில தொகையை செலுத்த வேண்டியது கட்டாயம்?
    அ) சேமிப்பு வைப்பு ஆ) நிலையான வைப்பு
    இ) நடப்பு வைப்புத்தொகை ஈ ) தொடர் வைப்பு

14. ----------- வங்கியில் இருந்து நிதியுதவி பெறுவதற்காக இணைப்பாக வழங்கப்பட்டது.
    அ) துறைமுகச் சான்றாணை ஆ) பண்டக காப்பாளர் இரசீது
    இ) துறைமுக இரசீது ஈ) பண்டக சான்றாணை

15. சரியான கூற்று எது?
    அ) உள்நாட்டு நீர்வழி போக்குவரத்து கனரக சுமைகளுக்குப் பொருந்தாது
    ஆ) விமான போக்குவரத்து வேகமான மற்றும் விலை குறைந்த போக்குவரத்து
    இ) நீர் இயற்க்கை கொடுத்த வெகுமதி ஆகும்
    ஈ) பெரிய சுமைகளையும் எடையையும் சுமப்பதற்கு விமானப் போக்குவரத்து உகந்தது

16. பின்வருவனவற்றில் எது காப்பீட்டின் பணி அல்ல?
    அ) கடன் நிதி அளிப்பு ஆ) இடர் பகிர்வு
    இ) மூலதன திரட்டுதல் உதவி ஈ) மட்டுப்படுத்துதல்

17. மின்னணு வலைப்பின்னல்கள் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் --------------- என அழைக்கப்படுகிறது.
    அ) மின்னணு வணிகம் ஆ) இணையதளம் இ) வலைத்தளம் ஈ) வர்த்தகம்

18. சமூகப் பொறுப்புணர்வு வணிகத்தில் பண்டங்களை -------- யில் வழங்குகிறது.
    அ) அதிக விலை ஆ) குறைந்த விலை இ) நியாயமான விலை ஈ) மிதமான விலை

19. பின்வருவனவற்றில் எது சமுதாயத்திற்கு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்ய உதவுகிறது?
    அ) வணிகத்தின் வெற்றி ஆ) விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள்
    இ) ஒழுக்கவியல் ஈ) தொழில் முறை நிர்வாகம்.

20. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின்--------------
    அ) கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள் இ) கடனாளிகள் ஈ) இவை எதுவும் இல்லை

## பகுதி — II

<u>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $7 \times 2 = 14$

21. தொழில் என்றால் என்ன?
22. வணிகத்தை வரையறு
23. இந்துச் சட்டத்தின் இரணடு பிரிவுகள் யாவை?
24. பட்டய (அ) சாசன நிறுமம் என்றால் என்ன?
25. தானியங்கி பணம் வழங்கும் அட்டைப் பற்றி நீவீர் அறிவது யாது?
26. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக
27. நீர் போக்குவரத்தின் ஏதேனும் இரண்டு நன்மைகளை எழுதுக.
28. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன ?
29. தனி உரிமையியல் இரண்டு தீமைகளைக் கூறு?
30. பணப் பரிமாற்றம் இடம் பெறாமல் நடைபெறும் வணிகம் எது? விளக்கம் தருக.

## பகுதி — III

<u>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $7 \times 3 = 21$

31. சேவைத் தொழில்கள் என்றால் என்ன?
32. பொது கழகங்கள் என்றால் என்ன?
33. கூட்டுறவுகளின் குறைபாடுகளை விவரி ( ஏதேனும் 3 )
34. வாங்குபவர்கள் மீது மின்னணு வணிகவியல் ஏற்படுத்தும் தாக்கம் என்றால் என்ன?
35. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
36. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள் யாவை? ( ஏதேனும் 3 )
37. வட்டாரக் கிராமிய வங்கிகளின் நோக்கங்கள் யாவை?
38. சமூகப் பொறுப்புணர்வின் வகைகளை வரிசைப்படுத்துக. ( ஏதேனும் 3 )
39. குளிர்சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன?
40. வேகமான மற்றும் விலையுயர்ந்த போக்குவரத்து என்பது எது? அதன் இரண்டு நன்மைகளை எழுதுக

## பகுதி — IV

<u>அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.</u> $7 \times 5 = 35$

41. அ) வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.

( அல்லது)

ஆ) தனியாள் வணிகத்தின் நன்மைகளை விவரி. ( ஏதேனும் 5 )

42. அ) கூட்டாண்மை ஒப்பாவணத்தில் உள்ள உள்ளடக்கம் யாது? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள் யாவை? ( ஏதேனும் 5 )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

43. அ) தொடர்வண்டி போக்குவரத்தின் நன்மைகளை விளக்குக. ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) தொழிலின் நோக்கங்களை விவரி

44. அ) கூட்டுறவு சங்கத்தின் நன்மைகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பல்வேறு வகையான வங்கிகளைச் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக. உதாரணம் தருக. ( ஏதேனும் 5 )

45. அ) அரசு நிறுமங்களின் சிறப்பியல்புகள் யாவை? ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை? (ஏதேனும் 5 )

46. அ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விளக்கவும்

( அல்லது)

ஆ) பல்வேறு வகையான குறுகிய கால நிதி ஆதாரங்களை விளக்குக. ( ஏதேனும் 5 )

47. அ) பன்னாட்டு நிறுவனத்தின் நன்மைகளை விவரி ( ஏதேனும் 5 )

( அல்லது)

ஆ) பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613